

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம் சூரங்குடியில் குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு அரசின் குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5.29 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள வேம்பார் கருப்பட்டி மற்றும் பனைப்பொருட்கள் குறுங்குழுமம் கட்டிடத்திற்கான அடிக்கல்லை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் அடிக்கல் நாட்டினார் உடன் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத், ஒன்றிய செயலாளர்கள் சின்ன மாரிமுத்து, ராமசுப்பு, இணை இயக்குனர் மாவட்ட தொழில் மையம் சொர்ணலதா, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் கே ஆர் .பெரியகருப்பன் தலைமையில் சிவகங்கை மாவட்டம் - திருப்பத்தூரில்

# மாமன்னர்கள் மருதுபாண்டியர்கள் - 224ஆம் ஆண்டு நினைவு நாள்!

## அமைச்சர்கள் ஐ .பெரியசாமி – ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன்,

## பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் -சிவ.வீ. மெய்யநாதன் - டி.ஆர்.பி ராஜா மரியாதை!

*சிவகங்கை, அக். 25-*

சிவகங்கை மாவட்டம் சிவகங்கையை தலைநகராக கொண்டு ஆட்சி புரிந்தவர்கள் மாமன்னர் மருது பாண்டியர்கள். பெரிய மருது ,சின்ன மருது என்று அழைக்கப்பட்டவர்கள் .மாமன்னர் மருது பாண்டியர்கள் மருது சகோதரர் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் நாட்டின் சுதந்திர போராட்டத்திற்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடியதில் திருப்பத்தூரில் 224 ஆண்டுகளுக்கு முன் திருப்பத்தூரில் தூக்கிடப்பட்டார்கள். அவர்களது புகழினை போற்றிடும் வகையில் ஆண்டுதோறும் அரசின் சார்பில் அவர்கள் சிலைகளுக்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்த ஆண்டு முதல்வர் தளபதி உத்திரவின்பேரில் திருப்பத்தூரில் உள்ள மருது பாண்டியர்கள் சிலைகளுக்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் தலைமையில் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, ஆர். எஸ் ராஜகண்ணப்பன்,பி .டி. ஆர் .பழனிவேல் தியாகராஜன், சிவ.வீ. மெய்ய நாதன், டி.ஆர்.பி. ராஜா, திருமதி தமிழரசி ரவிக்குமார் எம் எல். ஏ. மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி ஆகியோர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி னார்கள்.

அதனைத் தொடர்ந்து திருப்பத்தூர் பஸ் நிலையம் அருகில் பின்னர் மருது பாண்டியர் கள் தூக்கிலிடப்பட்டநினைவிடத்தில் உள்ள தூணுக்கு அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மலர் வளையம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் .

முன்னதாக பேரறிஞர் அண்ணா சிலையிலிருந்து அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் அமைச்சர்கள் ஊர்வலமாக மருதுபாண்டியர் மணி மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்கள் .இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர்

அ. கணேசன், மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன்,முன்னாள் எம். எல்.ஏக்கள் சுப.மதியரசன்,எஸ். மாரியப்பன் கென்னடி நகர் கழகச் செயலாளர்கள் க. பொன்னுச்சாமி, பெரி.பாலா,சி.எம்.துரை துரை ஆனந்த் , காரைக்குடி மாநகர செயலாளர்துணை மேயர் நா.குணசேகரன், இலக்கிய அணி துணைச் செயலாளர் மருது.அழகுராஜ்,

காரைக் குடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மாநில விவசாய அணி துணை செயலாளர் நல்லசேதுபதி,ஒன்றிய செயலாளர்கள் எஸ். சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம், பூமணி, கே. பாலசுப்பிரமணியன், கே.,எஸ் .ஆனந்த், சுப. சின்னதுரை, நா. நெடுஞ்செழியன் , குன்னக்குடி சுப்பிரமணியன், திருமலை முத்துராமலிங்கம், எம் .ஜெயராமன்,

பெ. மந்த காளை, ஆர். எம்.கென்னடி, வே. ஆரோக்கியசாமி, யோக. கிருஷ்ணகுமார் ,துரைராஜாமணி, எம். அண்ணாதுரை, அ.முத்துச்சாமி, கா. வெங்கட்ராமன் ,வே. தமிழ்மாறன், பூபாலசிங்கம், நாகனி ரவி ,லெ.மு.ரவிச்சந்திரன்,எம்.ஏ. கடம்ப சாமி சுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர்கள் த.உதயகுமார், பி.டி.ஆர்.முத்து, பள்ளத்தூர் கே .எஸ் .ரவி, பேரூர் கழக செயலாளர் ஆர். கார்த்திகேயன், கதிர்வேல், ஜெயராமன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார்,மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப் கான்,மாவட்ட மகளிர்ணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், நிர்வாகிகள் திலகவதி கண்ணன், மார்க்ரெட்கமலா, மஞ்சுளா, மகளிர் தொண்டரணிஅமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மாவட்ட மாணவரணிஅமைப் பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட சுற்றுச்சூழல்அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய் மாவட்ட சிறுபான்மை நலப் பிரிவு அமைப்பாளர் என்.எம். சாக்ளா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது ,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து ,பேரூராட்சி மன்ற தலைவர்கள் திருமதி கோகிலராணி நாராயணன், கே. பி .எஸ் .பழனியப்பன் துணை தலைவர் கான் முகமது, ஒன்றிய நகர பேரூர், கழக நிர்வாகிகள் பொருளாளர் ஏ. எம் .கண்ணன், பாண்டியன், திருநாவுக்கரசு , காளிமுத்து, மலைமேகு,ராம. ரவி, ரவிச்சந்திரன் ,ஒட்டுனர் ரமேஷ் ,ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் , உதயம் சண்முகம் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் பூக்கடை பாண்டி,அண்ணாமலை,சிவபுரிசேகர், புதூர் கன்னன்,இளைஞரணி மனோகரன், அபுதாகீர் ,பஷீர்அகமது, விவசாய அணி காளிமுத்து, தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன், சுப.தமிழரசன், அண்ணாமலை, புகழேந்தி, அச்சன்குளம்முருகன், பன்னீர் செல்வம் உட்பட மாவட்டம் முழுதும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் பூக்கடை பாண்டி ஏற்பாட்டின் பேரில்ஏற்பாடு செய்யப்பட்ட அன்னதானத் திட்டத்தை கூட்டுறவு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தொடங்கி வைத்தார்.முன்னதாக காலை 8.00மணிக்கு மருதுபாண்டியர்கள் மணி மண்டபத்தின் முன்பாக தேசியக் கொடியினைமாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடிஏற்றினார் .தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் திருமதி கா. பொற்கொடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத் ஆகியோர் மருதுபாண்டியர் கள் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து ம. தி.மு.க.பொது செயலாளர் வைகோ மருதுபாண்டியர்கள் திருஉருவச்சிலை மற்றும் தூக்கிலிடப்பட்ட நினைவிடத்தில் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார். இதில் ம.தி. மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ். மாங்குடி தலைமையில் காங்கிரஸ் கட்சி சார்பில்மருதுபாண்டியர்கள் திருவுருவச் சிலைகள் மற்றும் மருதுபாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இதில் மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய் காந்தி உட்பட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக பல்வேறு சமூக அமைப்புகள் சார்பிலும் மருதுபாண்டியர் சிலைகளுக்கு மலர்மாலை அறிவிக்கப்பட்டது. முன்னதாக மருதுபாண்டியர் கள் நினைவு இடத்தில் மருது பாண்டியர் வாரிசுதாரர்கள் பொங்கல் வைத்து வழிபட்டார்கள் . மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ. பிரசாத் தலைமயில் விரிவான போலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் போடப்பட்டிருந்தது.

### முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு

# செஞ்சியில் 68 பயனாளிகளுக்கு இலவச கண் கண்ணாடி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

*செஞ்சி, அக் 25-*

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு செஞ்சியில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது இந்த முகாமில் கண் பரிசோதனை செய்தவர்களுக்கு விலையில்லா கண் கண்ணாடி வழங்கும் நிகழ்ச்சி செஞ்சியில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில்விழுப்புரம் வடக்கு மாவட்டசெயலாளர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. கலந்துகொண்டு 68 நபர்களுக்குவிழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் விலையில்லா கண் கண்ணாடியை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி மேற்கு ஒன்றியசெயலாளர் பச்சையப்பன்,மாவட்ட பிரதிநிதி அணையரி ரவி,சமூக ஆர்வலர் ஜோலார்தாஸ்,நிர்வாகிகள் பழனி,

தொண்டரணி பாஷா, செந்தில்,அப்பண்டை ராஜ் சந்திர பிரபா அரங்க சிவகுமார் கலைச்செல்வி ஞானமணி,பர்வீன், முகாம் ஒருங்கிணைப்பாளர்ராஜ்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.க.வின் முடிவுரையை எழுதுகிறார் எடப்பாடி பழனிசாமி!

பா.ஜ.க.வின் ஆலோசனைப்படி அமைக்கப்பட்ட வியூக வகுப்பாளர்களின் தவறான வழிகாட்டலில் தப்புத் தப்பாகச் செயல்படுகிறார் அ.தி.மு.க.வின் கடைசிப் பொதுச் செயலாளர் திருவாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

**தமிழ்நாட்டு அரசியல் களத்தில் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் கோலோச்சி வந்த ஒரு மிகப்பெரிய கட்சியின் கடைசிப் பக்கத்தை எழுதிக் கொண்டிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி,**

1967 க்குப் பிறகு சாதாரண குப்பனையும், சுப்பனையும் படிக்க வைத்து அதிகாரத்தில் அமர்த்தி, அவர்களின் வாரிசுகளை இன்று அமெரிக்க அய்ரோப்பிய நாடுகளின் ஒயிட்காலர் ஜாப் எனப்படும் உச்ச பதவிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறது திமு கழக ஆட்சி அதிகாரம் என்பது எடப்பாடிக்குத் தெரியவில்லை.

நூறாண்டுகளுக்கும் மேலாக சுயமரியாதை உணர்வோடு, தேநீர்க் கடையிலும், சவரக் கடைகளிலும், தெரு முனையிலும் அரசியல் பேசிப் பழகி வளர்ந்திருக்கிற தமிழ்நாட்டு மக்கள், பார்ப்பனர்களால் கட்டப்பட்டிருக்கிற ஜாதி, கடவுள், மதம், பண்பாடு என்கிற எல்லாவகை ஆயுதங்களையும் வெறும் பொழுதுபோக்கு விசயங்களாகக் கருதுகிறவர்களே தவிர அரசியலில் கலக்க மாட்டார்கள் என்கிற எளிய உண்மையை, மூவாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து அதிகாரம் செய்கிற பார்ப்பனர்கள் உணர்ந்திருக்கிறார்கள். பாவம், எம்ஜியார் ஜெயலலிதா என்று தமிழ்நாட்டுக்குள்ளேயே குப்பை கொட்டி வருகிற எடப்பாடி பழனிசாமி வகையறாக்களுக்கு இந்த எளிய அரசியல் புரியவில்லை.



**சைதை சாதிக்**
**தலைமைக் கழகப் பேச்சாளர்**

அ.தி.மு.கவிலிருந்து பிரிந்து சென்றவர்களை ஒருங்கிணைக்க முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அறிவித்திருந்த பத்து நாள் கெடு முடிந்துள்ள நிலையில், பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் "அம்மையார் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு ஆட்சிக்குப் பல்வேறு இன்னல்கள் ஏற்பட்டன. அதிலிருந்து ஆட்சி யையும், கட்சியையும் காப்பாற்றித் தந்தது பா.ஜ.க தான். அந்த நன்றிக் கடனுக்காகத்தான் பா.ஜ.கவோடு தற்போது கூட்டணியில் இருக்கிறோம்" என்று திருவாய் மலர்ந்திருக்கிறார் அ.தி.மு.க தலைவர் எடப்பாடி பழனிச்சாமி. தன்னுடைய நிலைப்பாட்டுக்கு ஆதரவாக திருவள்ளுவரைத் துணைக்கு அழைத்திருக்கிறர். சேக்கிழார் எழுதிய கம்ப ராமாயணத்தை படித்துத் தேர்ந்த பழனிச்சாமிக்கு திருக்குறளும் தெரிந்திருக்கிறதே!

ஆட்சியைக் காப்பாற்றிய பா.ஜ.கவுக்கு நன்றியோடு இருப்பதாகக் கூறும் பழனிச்சாமி, தன்னை முதல்வராக்கிய சசிகலாவுக்கு நன்றியோடு இல்லையே ஏன்? அதே போன்று கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவோடு கூட்டணி சேராமல் தனியாகப் போட்டியிட்டாரே அது ஏன்? "நன்றி மறப்பது நன்றன்று" என்று பேசும் பழனிச்சாமி அவ்வப்போது நன்றியை மறந்து விடுகிறாரே அதன் காரணம் என்ன? பா.ஜ.க. மூத்த தலைவரான அத்வானிக்கு இருப்பதாக அம்மையார் ஜெயலலிதா குறிப்பிட்ட செலெக்ட்டிவ் அம்னிசீயா பழனிச்சாமிக்கும் இருக்கிறதோ? "பன்னீர்செல்வத்தை தர்மயுத்தத்தைத் தொடங்குமாறு நான் தான் கூறினேன்" என்று வெளிப்படையாகவே தெரிவித்தவர் பா.ஜ.கவின் இராஜகுரு ஆடிட்டர் குருமூர்த்தி. பழனிச்சாமிக்கு இன்னல்களைக் கொடுப்பதே பா.ஜ.க. தான். ஆனால் அதை மறைத்துவிட்டு பா.ஜ.க தான் ஆட்சியையும், கட்சியையும் காப்பாற்றியது என்று சொல்லும் பழனிச்சாமி, இதற்குப் பதிலாக ஊழல் வழக்குகளில் இருந்து என்னையும், என் மகனையும், எனது சம்பந்தியையும் காப்பாற்றுவதற்காகவே நான் பா.ஜ.க கூட்டணியில் இருக்கிறேன் என்று வெளிப்படையாகவே சொல்லி இருக்கலாம்.

தமிழ்நாட்டிற்கு பா.ஜ.க ஏராளமான நன்மைகளைச் செய்திருக்கிறது என்று பேசுகிறார் பழனிச்சாமி. தமிழ்நாட்டு மாணவர்களின் உயிரைக் குடிக்கும் நீட் தேர்வு, ஆண்டுதோறும் மின் கட்டண உயர்வுக்கு வழிவகுக்கும் உதய் மின் திட்டம், பள்ளிக் கல்வித் துறைக்கு நிதி தர மறுப்பது, மும்மொழிக் கொள்கை, தொகுதி மறு வரையறை போன்றவற்றில் எந்த நன்மையைச் சொல்கிறார் பழனிச்சாமி?

தமிழ்நாட்டின் 68 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் முகவர்களை நியமிக்கும் தகுதி, நகரம் ஒன்றியம் என குக்கிராமங்கள் வரைக்கும் கிளைக் கழகங்கள், 20% நிரந்தர வாக்கு வங்கி என்கிற மாபெரும் மக்கள் செல்வாக்கு மிகுந்த ஒரு கட்சியை கேவலம் ஒரு சதவீதம் செல்வாக்கு கூட இல்லாத ஒரு கட்சிக்காரன் எங்கேயோ டெல்லியில் இருந்து வந்து, இல்லையில்லை இவர்களை டெல்லிக்கு இழுத்துக் கொண்டுபோய் நிறுத்தி, "நடிகரோட ஜோடி போடலாமா?" னு கேட்கிறான், அதற்கும் கைகட்டி வாய் பொத்தி நின்று ஒருவர் சம்மதிக்கிறார் என்றால் இது அரசியலா? இதன் பெயர் கூட்டணியா? என்பதே தமிழ்நாட்டு மக்களின் தற்போதைய கேள்வி.

**எப்போது நட்டநடு ராத்திரியில் நாலு கார் மாறிப்போய் சந்தையில் மாட்டுத் தரகர்கள் பேரம் பேசுவதுபோல கமுக்கமாக கட்சியை குஜராத் மார்வாடிகளிடம் அடமானம் வைத்துவிட்டு வந்தாரோ அப்போதே அ.தி.மு.க,வின் உண்மைத் தொண்டர்கள் வெறுத்துப் போனார்கள். தமிழ்நாட்டு மக்கள் அதிமுகவை முற்றாக நிராகரித்து விட்டனர்.**

இப்படிப்பட்ட தமிழ்நாட்டில், மக்களால் புறந்தள்ளப் பட்டவர்களும், நிராகரிக்கப் பட்டவர்களுமான அதிமுகபாஜக கூட்டணியில், நாக்பூர் திட்டப்படி பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்ட ஒன்றிரண்டு விளையாட்டு 'பொம்மைகளை' விபரம் புரியாமல் கூட்டணிக்கு அழைத்து மேலும் அசிங்கப் பட்டுப் போன எடப்பாடி பழனிசாமி, விரக்தியின் உச்சத்தில் இருக்கிறார். திமுக கூட்டணிக் கட்சிகளையும், தலைவர்களையும் திட்டித் தீர்த்த பழனிசாமி, இப்போது தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த ஆதரவைப் பெற்று, திராவிடமாடல் அரசின் முதலமைச்சர் அவர்களையும் தரங்குறைந்த விமர்சனங்களைச் செய்து வருகிறார். இதுவும் புதிதல்ல இது அவருடைய தானைத் தலைவியின் வழிதான்.

எடப்பாடி பழனிசாமி அமீத்ஷா வீட்டிற்கு போய் வந்த நாள் முதலாக பா.ஜ.க. கும்பல் கூட்டணி ஆட்சி என்றே சொல்கிறது. அதை வலுவாக மறுக்கக் கூட திராணியற்று திணறிக் கொண்டிருக்கிறார் திருவாளர் பழனிசாமி அவர்கள். இதை அதிமுகவின் தலைவர்கள் தொண்டர்கள் மட்டுமல்ல தமிழ்நாட்டு மக்கள் உட்பட யாருமே ரசிக்கவில்லை. மாறாக, எல்லோரும் சிவசேனை, அகாலி தளம், ஜனதா தளம் கட்சிகளுக்கு ஏற்பட்ட நிலைமையை நினைத்து கலங்கிப் போயிருக்கிறார்கள். தன் சொந்தக் கருத்தை, தன் சொந்த சுயமரியாதையை, தனது சொந்தக் கட்சியைக் காப்பாற்றக் கூட திராணியற்று நிற்கிற பழனிசாமியை நம்புவதற்கு அதிமுக தொண்டர்கள் தயாராக இல்லை.

**தி.மு.க.விற்கு எதிராக, சமூகநீதிக்கு எதிராக பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்ட அதிமுக தமிழ்நாடு சமூக அரசியல் களத்தின் நிலையறிந்து எம்ஜியார் ஜெயலலிதா ஆகியோரால் ஓரளவு பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால், இப்போது தகுதி என்கிற ஒன்றே அறியாத சிறு கூட்டத்தால், சுயமரியாதை என்பதையே உணர்ந்திடாத அடிமைகளால் அதிமுக என்கிற கட்சியின் கடைசி அத்தியாயம் எழுதப்படுகிறது.**

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் முத ன்முறையாக இனப்பகைவர்களை நேருக்கு நேர் சந்திக்கிற போரை திராவிட மாடல் அரசு, தி.மு.கழக கூட்டணி எதிர்கொள்கிறது. சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு நிறைவில் மீண்டும் திராவிட இயக்கக் கொடியை நாட்டிட தமிழர்கள் ஓரணியில் திரண்டு போரிட வேண்டும்! ஆம் மானமும் அறிவும் மனிதருக்கு அழகு!!



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் கட்சி அலுவலகத்தில் திமுக கழக நிர்வாகிகளுக்கு பண்டிகையை முன்னிட்டு புத்தாடைகள் மற்றும் இனிப்புகளை தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் செந்தில்குமார், சின்னமனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, மாநில பொதுக்குழு உறுப்பினர் தக்காளிஅக்கீம், அனுமந்தம்பட்டி பேரூர் செயலாளர் ராஜ்குமார், ஓடைப்பட்டி பேரூர் செயலாளர் கனகராஜ் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் தேனி தெற்கு ஒன்றியம் வீரபாண்டியில் ஒன்றிய அலுவலகத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி. கிளை கழக நிர்வாகிகளிடம் குறைகளை கேட்டு ஆலோசனை நடத்தினார். உடன் மாவட்ட துணை செயலாளர் திருகண்ணன், தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்தின சபாபதி, வீரபாண்டி பேரூர் செயலாளர் செல்வம், தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் விஜயகுமார், தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் முத்துக்குமார் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.